## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 138/2012** **Date:07.10.2025**

**(PW1)- செல்வராஜமணி**

**1,2** பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கை யார் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சுப்பிரமணியப்புரத்தை சார்ந்த செல்லத்துரை என்பவரும், அதே ஊரை சார்ந்த ரமேஷ் என்பவரும் நங்கன் விளை என்ற ஊர் கம்பி பாலம் வரை இருக்கிறது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள பிவசாஆ. 2 ஆவணம் எங்கு பெறப்பட்டது என்றால் யூனியன் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது.. 21.02.2021 நாளிட்ட தீர்மானத்தை நான் தாக்கல் செய்துள்ளேன், நான் செருப்பங்கோடு ஊரில் பஞ்சாயத்து தலைவராக இருந்தேனா என்றால் ஊர் தலைவராக இருந்தேன்.

2. ஊர் தலைவராக இருந்த சமயத்தில் நான் 21.02.2021 தேதியில் ஒரு தீர்மானம் போட்டுள்ளேன், அது என்ன தீர்மானம் என்றால் சாட்சி தீர்மானத்தை பற்றி தெளிவில்லாமல் பதிலளிக்கிறார். இந்த வழக்கு 2012 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் தீர்மானம் 2021 ல் தான் போடப்பட்டது என்றாலும் சரிதான். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் , செருப்பங்கோடு என்ற பெயர் பலகையுடன் ஒரு பேருந்து நிறுத்தம் அமைத்துள்ளதாக ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் ஞாபகமில்லை.

3. இந்த வழக்கில் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் , செருப்பங்கோடு ஊர் பெயரிட்டு ஒரு புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன், மேற்படி பலகை யாரால் அமைக்கப்பட்டது என்றால் அரசாங்கத்தால் அமைக்ப்பட்டது. குருந்தன்கோடு A கிராமம் புல எண் 215 ,216,217 சம்பந்தமான வரைபடம் நான் எங்கிருந்து பெற்றேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிமிருந்து பெற்றேன். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து

ஆவணங்களிலும் செருப்பங்கோடு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் இந்த வழக்கில் கூடுதல் பிரதிவாதியாக என்ன காரணத்திற்காக சேர்க்கப்பட்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த ஊர் என்றால் செருப்பங்கோடு ஆகும். நான் செருப்பங்கோடை சார்ந்தவர் என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வழக்கின் முழு விவரங்களும் தெரியாது என்றாலும், நான் மூன்றாவது நபராக இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டதால் எனக்கு ,இந்த வழக்கை பற்றிய விவரங்கள் தெரியாது என்றாலும் சரியல்ல.

5. எனது ஊர் செருப்பங்கோடு மேற்கு என்று கோரி உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எனது ஊர் மக்களுக்கு செருப்பங்கோடு மேற்கு என்ற பெயரில் வரி வசூலிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளேன், அது சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஒரு ஊரின் பெயரை மாற்ற வேண்டுமென்றால் அரசு சட்டதிட்டங்களுக்குட்பட்டு தான் மாற்ற வேண்டும் என்றாலும் அவ்வாறு மாற்றப்பட்டிருந்தால் 1,2 பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணை இருக்க போவதில்லையென்றாலும் சரிதான்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அரசு துறை சம்பந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். அரசு துறை சம்பந்தமாக என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வி ஏ ஓ சான்றிதழ், பி டி ஓ உத்தரவு, பஞ்சாயத்து அலுவலக வரி ரசீதுகள் மற்றும் மேலும் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன், நினைவில்லை. ஒரு பஞ்சாயத்து தீர்மானத்திற்கு பஞ்சாயத்்தில் உள்ள மக்கள் கட்டுப்பட வேண்டும் என்றால் முறைப்படியான தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டும், முறையற்ற தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டியதில்லை.

2. பஞ்சாயத்திற்குட்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். நெட்டாங்கோடு பஞ்சாயத்திற்கு சம்பந்தப்பட்ட

ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பஞ்சாயத்தில் உள்ள எந்த ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்றால் பார்த்துள்ளேன் , நினைவில்லை. பஞ்சாயத்து தீர்மானத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு, ஏதேனும் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எது சம்பந்தமாக யாருக்கு புகார் கொடுத்தேன் என்றால் பஞ்சாயத்து தீர்மானத்திற்கெதிராக எந்த புகாரும் நான் கொடுத்ததில்லை.

3. நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் எத்தனை குக்கிராமங்கள் இருக்கிறது என்ற விவரமும் அது சம்பந்தமான ஆவணங்களையும் நான் பார்த்துள்ளேனா என்றால் 20 குக்கிராமங்கள் உள்ளது, ஆவணங்களையும் நான் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் என்றால் சாட்சி பதிலளிக்காமல் அமைதியாக இருக்கிறார். 05.07.2011 ல் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. மேற்படி தீர்மானத்திற்கெதிராக நான் நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். யாரால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரவீந்திரன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி 05.07.2011 தேதியிட்ட தீர்மானத்திற்கெதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லையென்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார். நெட்டாங்கோடு பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட வரைப்படத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி வரைப்படத்தில் எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

5. நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் நான் குறிப்பிட்டு உள்ள சர்வே எண்களின் ரீ சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த ரீ சர்வே எண்களை நான் பார்த்தேன் என்றால் 215 ,216,217 ஆகிய எண்களை பார்த்தேன். மேற்படி ரீ சர்வே எண்களின் வரைப்படத்தில் எந்த ஊர் என்பது குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. ரீ சர்வே வரைப்படத்தில் ஊர் குறிப்பிடப்படவில்லையென்றால்

சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. குருந்தன் கோடு கிராம புதிய ரீ சர்வே எண் 215,216,217 ன் பழைய சர்வே எண் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பத்திரங்களில் உள்ள பழைய சர்வே எண்களுக்கு மேற்படி 215,216,217 தான் ரீ சர்வே எண் கிடையாது என்றால் ஞாபகமில்லை.

6. மேற்படி பழைய சர்வே எண்களுக்கான புதிய சர்வே எண்களை காட்டக்கூடிய ஒப்புகை பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சானல் எப்போது இரண்டாக பிரிந்தது என்றால் சுமார் 95 வருடங்களுக்கு பிரிந்தது. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. மேற்படி சானல் இரண்டாக பிரிந்தது தொடர்பான ஆவணங்களை நான் பார்துள்ளேனா என்றால் செருப்பங்கோடு ஜங்சனில் உள்ள கல்வெட்டில் பார்த்துள்ளேன். மேற்படி கல்வெட்டு பற்றிய சங்கதிகளை என்னுடைய எதிருரையிலோ முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 14.10.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.
)

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்